**காலநிலை தணிப்பு நடவடிக்கை ஆதரவு செயற்திட்டம் - 2021 ஏப்ரல் 30 இல் முடிவடைந்த 4 மாதங்களுக்கான**

காலநிலை தணிப்பு நடவடிக்கை ஆதரவு செயற்திட்டத்தின் 2021 ஏப்ரல் 30 இல் முடிவடைந்த நான்கு மாதங்களுக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 ஏப்ரல் 11 ஆம் திகதிய ரீஎப்0பீ0017 ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் II(அ)(அ) ஆம் பிரிவின் II ஆவது உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் அவதானிப்புக்களும் கருத்துரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், சுற்றாடல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளது. பாதுகாப்பு மற்றும் சமூக நலனிற்காக இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் காலநிலை தணிப்பு முகாமைத்துவத்தை மேம்படுத்துதல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். மானிய உடன்படிக்கையின் பிரகாரம், ரூபா 315 மில்லியன் இற்குச் சமமான ஐ.அ.டொலர் 1.8 மில்லியன் தொகையான செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 ஏப்ரல் 11 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 பெப்ரவரி 28 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2021 ஏப்ரல் 30 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த நான்கு மாதங்களுக்கான அதனது செலவினக் கூற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| இலக்கம் | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 சனவரி 01 முதல் 2021 ஏப்ரல் 30 வரையான 04 மாத காலப் பகுதிக்காக உலக வங்கியினால் ரூபா 118 மில்லியன் தொகை விடுவிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 09 மில்லியன் உலக வங்கிக்கு மீள அனுப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட கால எல்லைக்காக உலக வங்கியினால் வழங்கப்பட்ட நிதியில் 7.8 சதவீதம் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கண்காணித்தல், அறிக்கையிடுதல் மற்றும் உறுதிப்படுத்தும் முறைமை மற்றும் இலங்கை காபன் பதிவுகளுக்காக தொடர்புடைய அடிப்படையில் பயிற்சியினை வழங்குதல், ஈடுபடுத்துதல், நுகர்தல் மற்றும் ஒழுங்கமைத்தல் மற்றும் பராமரிப்புக்களுக்கான ஆலோசனை சேவைகள், காலநிலை தாக்க இணையத்தளத்தை அபிவிருத்தி செய்வதற்கான பெறுகைகள் பல்வேறு காரணங்களினால் கையளிக்கப்பட்டிருக்க வில்லை. | கால அட்டவணையின் படி திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்காக நிதியம் பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 12.4 மில்லியன் பெறுமதியான 55 கணனிகள் கணக்காய்வுத் திகதி வரையிலும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | தொடர்புடைய தரப்பினர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட 55 கணனிகள் ஆரம்ப நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுவதுடன் இலங்கை தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனத்தின் தேசிய காலநிலை தாக்க தரவுகளை பரிமாறும் இணையத்தளத்துடன் அவை முழுமையாக பயன்படுத்தப்படுகின்றது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக கணனிகளை பயன்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |